திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய தொழில் நிறுவனங்களில், 'பிஎச்இஎல்' போன்றவற்றில் வேலைக்கு ஆட்கள் எடுக்கும்போது, லோகல் எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிலே ஆட்கள் எடுக்க வேண்டும் என்று தி.மு.க. ஆட்சியிலே போட்ட உத்தரவு, அவசர காலத்தில் ரத்து செய்யப் பட்டிருக்கிறது. அதை மீண்டும் கொண்டு வருவதன் மூலம், இங்கே ஐ.டி.ஐ. போன்றவைகளில் படித்து பயிற்சி பெற்றுவரும் மாணவர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்க வகை ஏற்படும். ஆனால், இப்போது அப்படி பயிற்சி பெற்றவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. மற்ற மாநிலங்களிலே இருந்து, அகில இந்திய அடிப்படையில், அதிக மார்க்குகள் வாங்கியவர்களுக்கு வேலை கொடுக்கப்படுகிறது. அங்கே அதிகமான மார்க்குகள் போடுகிறார்கள். ஆகவே, இங்கே உள்ள மாணவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இது மத்திய அரசோடு நாம் பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டிய ஒரு கொள்கை பற்றிய கேள்வியாக இருக்கிறது.

புதுக்கோட்டையில் உள்ள அருங்காட்சியகம்.

*வினா எண். 70— திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் உள்ள அருங்காட்சியகத்தை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) புதுக்கோட்டை நகரின் மையப்பகுதியில் புதிய கட்டடம் கட்டி அருங்காட்சியகத்தை அங்கு மாற்ற கருத்துரு ஒன்று பரிசீலனையில் இருக்கிறது.